பக்கங்கள்: 06
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 01 வெள்ளிக்கிழமை 14.01.2022 கதிர் 298

## கைக்குண்டு மீட்பு: 14 பேர் வாக்குமூலம்

பொரளை 'ஓல் செயின்ட்ஸ்' தேவாலய வளாகத்தில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரை 14 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் வாக்கு மூலத்தைப் பதிவு செய்துள்ளனர். பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# 'மொட்டு' கூட்டு அரசிலிருந்து கௌரவமாக வெளியேறுங்கள்

### சு.கவுக்கு நாமல் எச்சரிக்கை



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசு கூட்டு அரசு. இந்த அரசின் கொள்கைகள் பிடிக்க வில்லையெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கௌரவமான முறையில் வெளியேறவேண்டும்.

- இவ்வாறு அமைச்சல் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அரசில் அங்கம்வகிக்கின்றது. எனவே, அரசால்எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அக்கட்சியும்

☞2

## ஓட்டோ விபத்தில் குழந்தை மரணம்

பதுளை, ஜன. 14

பதுளை - பசறை பிரதான வீதியின் ஐந்தாம் கட்டைப் பகுதியில் நேற்று மாலை ஓட்டோ ஒன்று குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் எட்டு மாதக் குழந்தை ஒன்று உயிரிழந்தது.

ஓட்டோவைக்குழந்தையின் தாயே செலுத்தினார் எனவும், அவருக்குச் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் சம்பவத்தில் காயமடைந்த குறித்த தாய் மற்றும் ஓட்டோவில் பயணித்த மற்றுமொரு ஆண் ஆகியோர் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# சு.க. வெளியேறினால் அரசு கவிழ்ந்தே தீரும்!

### நாமலுக்கு மைத்திரி பதிலடி

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டு அரசில் பிரதான வகிபாகத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வகிக்கின்றது. இந்த அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறினால் அரசு கவிழ்வது உறுதி.**

**- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன எம்.பி. தெரிவித்தார்.**

☞2



# மைத்திரியை சிறையில் அடைக்கச் சதித் திட்டம்!

### சு.கவின் பொதுச்செயலர் தயாசிறி பகீர் தகவல்



மைத்திரிபால சிறிசேனவை திட்டமிட்ட அடிப்படையில் சிறையில் அடைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் பின்னணியில் செயற்படுபவர்கள் யார் என்பதும் எமக்குத் தெரியும். நேரம் வரும்போது விவரம் வெளியிடப்படும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்

☞2

# இலங்கையில் மீண்டும் பேராபத்து அறிகுறிகள்

### சுகாதாரப் பிரிவு கடுமையான எச்சரிக்கை

இலங்கையில் மீண்டும் கொரோனா அலை ஏற்படும் அபாய நிலை உள்ளது எனத் தேசிய தொற்று நோய் விஞ்ஞான நிறுவகத்தின் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம எச்சரித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த போதே தேசிய தொற்றுநோய் விஞ்ஞான நிறுவகத்தின்

☞2

# ரயில் நிலைய அதிபர்கள் மீளவும் பணிப்புறக்கணிப்பு

ரயில் நிலைய அதிபர்கள் இன்று மீண்டும்பணிப்புறக்கணிப்பைமுன்னெடுத்துள்ளனர்.

ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் உப தலைவரைப் பதவியிலிருந்துநீக்குவதற்குரயில்வேத்திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் நடவடிக்கை எடுத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது எனவும் அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு

☞2




## மைத்திரியை சிறையில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதவை வருமாறு :-

எமது தலைவர் அரசை விமர்சித்து வருகின்றமையால், ஏதாவது செய்து அவரைச் சிறையில் அடைப்பதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சவாலை அவர் எதிர்கொள்வார். எமது கட்சியும் தயார் நிலையில்தான் உள்ளது.

மைத்திரிபால சிறிசேனவைப் பலவந்தமாகச் சிறையில் அடைக்க முற்படுவது யார் என்பதும் எமக்குத் தெரியும். அரச பிரதானிகளா அல்லது வெளியில் உள்ளவர்களா எனத் தற்போதே குறிப்பிட முடியாது. நேரம் வரும்போது எல்லாவற்றையும் வெளிப்படுத்துவோம்.

நாட்டில் சட்டம் என்று ஒன்று இருக்கின்றது. ஆனால், அதற்கு அப்பால் சென்று, மைத்திரியைச் சிறையில் அடைக்க வேண்டும் எனச் சில அமைச்சர்கள் வலியுறுத்தி வருகின்றனர். எனவே , இதன் பின்னணியில் இரகசிய நிகழ்ச்சி நிரலொன்று இருக்கக்கூடும்.

அதேவேளை, அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு இன்னும் முடிவெடுக்கவில்லை. எனினும், அரசின் பயணம் தவறெனில் அதனைத் தைரியமாகச் சுட்டிக்காட்ட மத்திய செயற்குழு அனுமதித்துள்ளது. அரசின் பதவிக் காலம் முடியும் வரை நாம் அரசில் அங்கம் வகிப்பாமோ என்பதை இப்போது கூறமுடியாது. சிலவேளை, எமது கட்சி நீக்கப்படக்கூடும் - என்றார்.

## இலங்கையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரு வாரங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை, சற்று அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மீண்டும் கொரோனா அலை ஏற்படக்கூடும் என்ற ஐயம் நிலவுகின்றது.

நாட்டின் பல பகுதிகளில் ஒமிக்ரோன் திரிபுடனான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒமிக்ரோன் திரிவானது மிக இலகுவாகப் பரவக்கூடியது.

அறிகுறிகள் குறைந்துள்ள போதிலும், பெரும்பாலானோருக்கு அந்தத் திரிவு தொற்றக்கூடும் எனத் தேசிய தொற்று நோய் விஞ்ஞான நிறுவகத்தின் வைத்தியர் ஆனந்த விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

## ரயில் நிலைய ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்திருந்த 24 மணிநேர தொழிற்சங்க நடவடிக்கை நேற்று நள்ளிரவு நிறைவடைந்தது.

இந்த நடவடிக்கை காரணமாக பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தும் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இந்தநிலையில், ரயில் நிலைய அதிபர்கள் மீண்டும் அவசர தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சு.க. வெளியேறினால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'அரசின் கொள்கைகள் பிடிக்கவில்லையெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கௌரவமான முறையில் வெளியேற வேண்டும்' என்று அமைச்சல் நாமல் ராஜபக்ஷ ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இருந்துகொண்டு எமக்குச் சவால் விடும் சிறியவர்களும், பெரியவர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்துதான் அரசியலை ஆரம்பித்தார்கள். சுதந்திரக் கட்சிதான் அவர்களின் அரசியல் வாழ்வுக்கு முகவரி கொடுத்தது. இதை மறந்து அவர்கள் செயற்படுகின்றார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜனமுன்னணிகூட்டணிவெற்றியடைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே பிரதான காரணம். இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசில் பிரதான வகிபாகத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வகிக்கின்றது. அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறினால் அரசு கவிழ்வது உறுதி.

இதை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமை புரிந்துகொள்ளும். அரசைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. எனினும், அரசு தவறான பாதையில் தொடர்ந்து பயணித்தால் பிரதான பங்காளிக் கட்சியான நாம் அதிலிருந்து வெளியேறவும் தயங்கமாடடோம் - என்றார்.

## 'மொட்டு' கூட்டு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கூறவேண்டும். மாறாகத் தமக்குத் தொடர்பில்லை என நழுவிவிட முடியாது.

அதேபோல் அரசின் தீர்மானங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பிடிக்கவில்லையெனில், அங்கும், இங்குமாக விமர்சனங்களை முன்வைத்துக்கொண்டு திரிவதைவிடக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கூறிவிட்டு கௌரவமாக விடைபெறுவதே சிறந்தது - என்றார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்




**கிருபா லேணர்ஸ்**
කිරුබා ලර්නර්ස් **KIRUBAA LEARNERS**

அரச அங்கீகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தொடரும் மனித உரிமை மீறல்கள்

**அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசின் செயல்போக்குக் குறித்த மதிப்பீடு ஒன்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு ஒன்றினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.**

**வழமைபோல மனித உரிமைகள் கண்காணிப்பகம் என்ற அமைப்பே இலங்கை தொடர்பான முடிந்த ஆண்டின் தனது பார்வையை தனது விவரமான அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது.**

**நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்களையும் முஸ்லிம்களையும் தொடர்ந்து அடக்கி, ஒடுக்கி, இம்சித்துப் புறமொதுக்கும் தனது பேரினவாதக் கொடூரப் போக்கிலிருந்து இலங்கையின் கோட்டாபய அரசு இம்மியும் விலகவில்லை என்பதை அந்த அறிக்கை திரும்பவும் துலாம்பரப்படுத்தியிருக்கின்றது.**

**கடந்துபோன ஆண்டில் நூறு நாடுகளில் மனித உரிமைகள் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பான தனது மதிப்பீட்டு அறிக்கையை அது வெளியிட்டுள்ளது. அதிலேயே மனித உரிமைகளை மதிப்பது தொடர்பாக கோட்டா அரசின் முகமூடியைக் கிழித்து உண்மை முகத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றது அந்த அமைப்பு.**

**2021 இலும் இலங்கை அரசு, தன் நாட்டின் சிறுபான்மை இனங்களை ஒடுக்கும் தன் போக்கைத் தீவிரமாகத் தொடர்ந்தது. மனித உரிமைகள் செயல்பாட்டாளர்களை இம்சைப்படுத்தித் துன்புறுத்தியது. ஜனநாயகக் கட்டமைப்புக்களைக் குறைமதிப்புக்கு உட்படுத்திச் செயற்பட்டது என்றெல்லாம் அந்த அமைப்பு சரமாரியாகக் குற்றச்சாட்டுக்களை – உண்மைகளை – வரிசைப்படுத்தி அம்பலப்படுத்தியது.**

**மிகக் கொடூரமான – மிருகத்தனமான – நாகரிகமற்ற – சட்டம் என்று முன்னைய இலங்கை அரசுகளாலேயே சர்வதேச மட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் முழு அளவில் தொடர்ந்தும் பிரயோகத்தில் நீடிக்கின்றது.**

**அதனையும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பட்டய ஏற்பாடுகளையும் தான் மேற்கொள்ளும் பௌத்த, சிங்களப் பேரினவாத அரச பயங்கரவாதத்துக்குச் சாதகமான ஆயுதமாகத் தொடர்ந்தும் பயன்படுத்துகின்றது இலங்கை அரசு.**

**கோட்டாபய அரசாங்கத்தின் இந்தக் கொடூரப் போக்கை விரிவாக விவரிக்கின்றது மனித உரிமைகள் காப்பகத்தின் இந்த ஆண்டறிக்கை.**

**ஒருபுறம், மனித உரிமை மீறல் போக்கை சீர்படுத்தும் விதத்தில் உரிய சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படும் என சர்வதேச சமூகத்துக்கு உறுதியளித்த கொழும்பு அரசு அதனை மீறி நடக்கின்றது.**

**மறுபுறம், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற பெருங்குற்றங்களுக்கான பொறுப்புக் கூறலையும் அது தடுத்து மீறிச் செயற்படுகின்றது.**

**அதேநேரம் இத்தகைய குற்றங்கள் நடந்தேறுவதற்குப் பொறுப்பாக இருந்தவர்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமலாக்கப்பட்டோர் ஆணைக்குழு போன்ற சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நியமித்தமை மூலம் அந்தக் குழுக்களின் செயல்பாட்டையும் கொச்சைப்படுத்தி, சீரழித்துள்ளது கோட்டாபய அரசு என்று அந்த அறிக்கை உண்மைகளை அம்பலப்படுத்துகின்றது.**

**இன்னும் இரண்டு மாதத்தில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தில் தனது தொடர்ச்சியான மனித உரிமை மீறல் போக்குக்கான மோசமான எதிர்வினைகளை கொழும்பு சந்திக்க இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதற்கான முன்னாயத்த மணிதான் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இந்த**

# மாற்றத்தை ஏற்படுத்தும் அதிகாரம் மக்களுக்கு!

### இதனை அவர்கள் புரியவேண்டும் என்கிறார் அநுர

நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்பதில் சந்தேகம் வேண்டாம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்தோடு, மாற்றத்தை ஏற்படுத்தும் அதிகாரம் மக்களுக்கு உள்ளது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பண்டாரகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நாட்டின் ஆட்சியை மாற்றுவதற்கு நாட்டு மக்கள் தயக்கம் காட்டுகின்றனர் எனத் தெரிவித்தார்.

சரியான மக்கள் மற்றும் சரியான அரசாங்கத்துடன் நாட்டை அபிவிருத்தி செய்வதே முன்னேற்றத்துக்கான ஒரே மாற்றுவழி என்று சுட்டிக்காட்டிய அவர், மாற்றத்தை ஏற்படுத்தும் அதிகாரம் மக்களுக்கு உள்ளது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அதன்படி அவர்கள் செய்ய வேண்டும் என்றும் கூறினார். கட்சியில் யார் உரிய அமைச்சுப் பதவிகளை வகிக்கப்போகிறார்கள் என்பதில் பலருக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன எனத் தெரிவித்த அவர், தற்போது நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்கள் எவராலும் தமது உரிய பணிகளைச் செய்ய முடியுமா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

## கொழும்பை அச்சுறுத்தும் முதலைகளை பிடிக்க கடற்கரைகளைச் சுற்றி பொறிகள்!



தெஹிவளை, காலிமுகத்திடல் போன்ற பகுதிகளில் அண்மைய நாள்களாகத் தென்பட்ட முதலைகளைப் பிடிக்க கொழும்பு நகரைச் சுற்றி பொறிகள் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் தெஹிவளை கடற்கரையில் நபர் தாக்கி கொன்ற முதலையைப் பிடிக்கவே வனவிலங்கு அதிகாரிகள் காலிமுகத்திடல் கடற்கரையில் கூண்டு வைத்து வருகின்றனர் என ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 3 ஆம் திகதி தெஹிவளை கடற்பரப்பில் நீராடச் சென்ற ஒருவர் முதலையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இதனையடுத்து, கல்கிசையை மற்றும் தெஹிவளைக் கடற்கரைக்குச் செல்ல வேண்டாம் என பொதுமக்களிடம் பொலிஸார் கேட் டுக் கொண்டனர்.

அதன்பின்னர், 14 அடி நீளமுள்ள குறித்த முதலை, வெள்ளவத்தையில் உள்ள கால்வாய் மற்றும் காலிமுகத்திடல் போன்ற பகுதிகளில் காணப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

இதனையடுத்து, வனவிலங்கு அதிகாரிகள் பலரின் உதவியுடன் முதலையை உடனடியாகக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன குறிப்பிடத்தக்கது.

## ஒமிக்ரோன் அலையின் விளிம்பில் நாடு சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுப்பு

ஒமிக்ரோன் அலையின் விளிம்பில் இலங்கை இருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பூஸ்டர் தடுப்பூசியைப் பெறுவதன் மூலம் இது கட்டுப்படுத்தப்படலாம் என்று தொடர்ந்து நினைவூட்டப்பட்ட போதிலும் பொதுமக்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெறு வதில் தயக்கம் காட்டுகின்றனர் என வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ள அவர், பூஸ்டர் டோஸ் பெறும் நபர்களின் சதவீதம் 50 சதவீதமாக இருக்கும் என்று தாங்கள் எதிர்பார்த்த நிலையில், தற்போது அந்த சதவீதம் 20 சதவீதமாக உள்ளதாகத் தெரிவித்தார்.

எனவே, கட்டுக்கதைகளை நம்பாது பூஸ்டர் டோஸை கூடிய விரைவில் பெறுமாறு அவர் வலியுறுத்தினார்.

## நாட்டில் நிலவும் மின்தடையை சீராக்க சீனாவில் இருந்து நிபுணர் வருகை!

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தில் பழுதடைந்துள்ள ஜெனரேட்டரை ஆய்வு செய்வதற்காக சீனாவில் இருந்து நிபுணர் ஒருவர் இலங்கை வரவுள் ளார் என இலங்கை மின்சார சபை தெரிவித் துள்ளது.

இந்த ஜெனரேட்டரை விரைவில் சீர்செய்து 300 மெகாவாட் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்பில் சேர்ப்பதற்கு நம்பிக்கை உள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதனையடுத்து, மின்சார விநியோகம் தொடர்பிலான தற்போதைய நிலைமை ஓரளவுக்குத் தீர்க்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்குத் தடையின்றி நிலக்கரி விநியோகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது கையிருப்பில் உள்ள நிலக்கரி இந்த ஆண்டு மே மாதம் வரை போதுமானதாக இருக்கும் என்றும் இலங்கை மின்சார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

## அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 5 ஆயிரம் ரூபா சுற்றறிக்கை வெளியீடு

அரச உத்தியோகத்தர்களுக்கும் ஓய்வுதாரர்களுக்கும் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்களுக்கும் அரசு

ரூபா மேலதிக கொடுப்பனவை வழங்குவதாக அண்மையில் அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்த விடயம் தொடர்பாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருந்த நிலையிலேயே, அது தொடர்பான சுற்ற

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# பிரிட்டனில் முந்தைய ரோமாபுரி நகரம் கண்டுபிடிப்பு



பிரிட்டனில் HS2 என்று அழைக் கப்படும் 'ஹை ஸ்பீடு – 2' ரயில் பாதை அமையவுள்ள இடத்தில் அகழாய்வு மேற் கொண்ட தொல்லியல் ஆய்வாளர்கள் அங்கு ஒருவளம்மிகுந்த, பரந்த ரோமானிய வர்த்தகக்குடியிருப்பு ஒன்று இருந்ததைக் கண்டறிந்துள்ளனர்.

தெற்கு நார்தம்ப்டன்யைரில் உள்ள பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ் வாராய்ச்சியின் போது இது கண்டு பிடிக்கப்பட்டது.

சுமார் 80 தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்களை கொண்டுள்ள அந்தக் குழு, கடந்த ஓராண்டாக அந்த இடத்தில் அகழாய்வு செய்து 300க்கும் மேற்பட்ட ரோமப் பேரரசு கால நாணயங்கள் உள்பட ஏராளமான கலைப் பொருள் களை கண்டுபிடித்துள்ளனர்.

அகழ்வாராய்ச்சியின் தள மேலாளர் ஜேம்ஸ் வெஸ்ட் இது அசாதாரண மானது. இங்கு வாழ்ந்த மக்களைப் பற்றி அதிகம் கூறுகிறது என்றார்.

அங்கு கறுப்பு மண் அதிகம் இருப்பதால் ப்ளேக் க்ரவுண்ட்ஸ் ( Blac kgrounds) என்று அழைக்கப்படும் தளம், எட்கோட் மற்றும் சிப்பிங் வார்டன் கிராமங்களுக்கு அருகில் உள்ளது.

30க்கும் மேற்பட்ட சுற்று வீடுகளால் உருவாக்கப்பட்ட இந்த இரும்புக் கால கிராமம், கி.மு 400 இல் நிறுவப்பட்டதாக நம்பப் படுவதாகவும், இது ஒரு பணக்கார ரோமானிய வர்த்தக நகரமாக வளர்ந்துள்ளது என்றும் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்தக் குடியிருப்பு காலப் போக்கில் விரிவடைந்து, ரோமா புரி பேரரசின் ஆட்சிக் காலத்தில் மிகவும் செழிப்பாக மாறியது, புதிய கல் கட்டடங்கள் மற்றும் சாலைகள் கட்டப்பட்டன என்று கண்டுபிடிப்புகள் தெரிவிக் கின் றன.

அகழ்வாராய்ச்சி குழு 33அடி அகலமான ரோமப் பேரரசு கால சாலையைக் கண்டுபிடித்தது. அந்த அளவு வழக்கமான சாலைகளைப் போல் அல்லாதது என்று விவரித்தனர். இச்சாலை அகழாய்வுத் தளத்தின் வழியாக செல்கிறது.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பட்டறைகள், சூளைகள், அழகாகப் பாதுகாக்கப்பட்ட கிணறுகள் ஆகியவை இருந்ததற்கான ஆதாரங்கள் மற்றும் நெருப்பின் சிவப்பு நிறத்தில் உள்ள மண்ணாலான பொருள்கள் ஆகிய– வற்றைக் கண்டறிந்தனர். இது ரொட்டி தயாரித்தல் மற்றும் உலோக வேலைகள் அங்கு நடந்ததைக் குறிக்கிறது.

நாணயங்களுடன், கண்ணாடிப் பாத் திரங்கள், அலங்கார மண்பாண்டங்கள், நகைகள் மற்றும் ஒப்பனைக்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஒப்பனைக்காக எண்ணெயுடன் கலந்து பயன்படுத்தப்பட்ட கலினா (லெட் சல்பைடு) எனும் கனிமத்தின் தடயங்கள் ஆகியவை அகழாய்வுத் தளத்தில் கண்டுபிடிக்கப்பட்டன என்று தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரி வித்தனர்.

லண்டன் தொல்பொருள் அருங் காட்சியகம் ( Museum of London Archaeology- MOLA) கண்டறிந்த மிகவும் ஈர்க்கக்கூடிய தளங்களில் இதுவும் ஒன்று என்று HS2இல் கண்ட றிந்ததை குறித்து வெஸ்ட் கூறினார்.

இந்த ப்ளேக் க்ரவுண்ட்ஸ் அக ழாய்வுத் தளம் பல காலகட்டங்களில் பரவியுள்ளது என்றும் பல உயர்தர கண்டுபிடிப்புகளை தங்கள் அணிக்கு வழங்கியது என்றும் அவர் கூறினார்.

ப்ளேக் க்ரவுண்ட்ஸ் அகழாய்வுத் தளம் உண்மையில் இந்த பிராந்தியத்தி லும் , அதற்கு அப்பாலும் ரோமப் பேரரசு கால நிலப்பரப்பு பற்றிய நமது புரிதலை மாற்றும் திறனைக் கொண்டுள்ளது, என்று அவர் மேலும் கூறினார்.

# இரும்புப்பெட்டி முகாம்களில் நோயாளிகள் தனிமையில்



சீனாவில் கொரோனா வைரஸ் பாதித் தவர்கள் பெரிய இரும்புப் பெட்டி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளமையைக் காண்பிக்கும் காணொளிகள் தற்போது வைரலாக பரவி வருகின்றன. இதற்காக வரிசையாக இரும்பு பெட்டிகள் கொண்ட முகாம்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளன. ஷிஜியாசுவாங் மாகாணத்தில் 108 ஏக்கர் பரப்பளவில் தனிமைப்படுத்தப்பட்ட வளாகம் அமைக் கப்பட்டுள்ளது

சீனாவின் பெய்ஜிங் மாகாணத்தில் அடுத்த மாதம் குளிர்கால ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ள தையடுத்து கொரோனா இல்லா சீனா என்ற கொள்கை அடிப்படை யில், கொரோனாவை ஒழிக்க லட்சக்கணக்கான மக்களை அந்நாட்டு அர சாங்கம் தனிமைப்படுத்தி வைத்துள்ளது. கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் அனைவரும் ஒரு படுக்கை, கழிப்பறை மட்டுமே உள்ள இரும்பு பெட்டிகளில் அடைத்து வைக்கப் பட்டுள்ளனர். சீனாவில் யாரா வது ஒருவருக்கு கொரோனா ஏற்பட்டால் கூட அந்தப் பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் அழைத்து வரப்பட்டு இரும்பு பெட்டிகளில் 2 வாரம் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

55 லட்சம் மக்கள்தொகை கொண்ட அன்யாங்கைத் தவிர மற்ற நகரங்களில் ஓமிக்ரோன் பாதிப்பு 2 பேருக்கு மட்டுமே கண்ட றியப்பட்டு உள்ளது.



# கஸகஸ்தான் போராட்டத்தில் 1,678 பேர் கைதாகினர்

கஸகஸ்தானில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில், கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் மேலும் 1,678பேர் கைது செய்யப்பட் டுள்ளனர் என உட்துறை அமைச் சகம் தெரிவித்துள்ளது.

சோவியத் ஒன்றியமிடமிருந்து கஸகஸ்தான் சுதந்திரம் பெற்றதி லிருந்து அந்த நாடு இதுவரை கண்டிராத இந்தத் தீவிர போராட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள் ளவர்களின் எண்ணிக்கை சுமார் 12 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங் களில் 164பேர் உயிரிழந்தனர் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மத்திய ஆசிய நாடான கஸகஸ் தானில் வாகனங்களுக்கு பயன் படுத்தப்படும் திரவ பெற்றோலிய வாயுவின் விலையை அரசாங்கம் இரண்டு மடங்காக உயர்த்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் புரட்சி வெடித்தது.

பின்னர் அந்த நாட்டின் முக்கிய நகரமான அல்மாட்டியில் மக்கள் போராட்டம் பெரும் வன்முறையாக மாறியது.

இதில் அல்மாட்டி நகரில் உள்ள ஜனாதிபதி மாளிகை, மேயர் அலுவலகம் மற்றும் 100க்கும் மேற்பட்ட பொலிஸ் வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இதை தொடர்ந்து, அல்மாட்டி நகரில் அவசர நிலையை பிரகடனப் படுத்தப்பட்டது.

நாட்டில் நடந்த வன்முறை ஆட்சியை கவிழ்க்கும் ஒரு முயற்சி என ஜனாதிபதி காசிம் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், இந்த சதி முன்னாள் சோவியத் நாடுகளின் இராணுவ கூட்டணி தலைவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டது எனவும் அவர் கூறினார். எனினும் அவர் எந்த ஒரு நாட்டையும் குறிப்பிட்டு சொல்லவில்லை.

# இரு தசாப்தங்களை கடந்தது யூரோ நாணயம்



யூரோ தாள்கள் மற்றும் நாணயங் கள் முதன்முதலில் 12 ஐரோப்பிய நாடு களில் 1 ஜனவரி 2002 அன்று அறி முகப்படுத்தப்பட் டன. அவை அந்த நாடுகளின் தேசிய நாணயங்களுக்கு பதிலாக அறிமுகம் செய்யப்பட்டன.

இன்று 20 ஆண்டுகள் கடந்த நிலையில் 19 நாடுகளில் 34 கோடிக்கும் அதிகமான ஐரோப்பியர்களும் யூரோவைப் பயன்படுத்துகின்றனர்.

இரண்டு தசாப்தங்களாக ஐரோப்பிய பொருளாதாரங்கள் மற்றும் வணிகங்களுக்கு ஒற்றை நாணயமாக யூரோ இருக்கிறது.யூரோ பகுதி முழுவதும் வேலை மற்றும் வணிகம் மற்றும் பயணம் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் அதே நாணயத்தைப் பயன்படுத்தி வாழ்க்கையை எளிமையாக்குவது யூரோவின் நோக்கமாக இருந்தது.

யூரோவின் வலுவான சர்வதேசப் பங்கு, ஐரோப்பிய ஒன்றியப் பொருளாதாரம் மற்றும் நிதிய அமைப்பை அந்நியச் செலாவணியைப் பாதுகாக்கவும், பிற நாணயங்களின் மீதான

செலவை உறுதி செய்யவும் நோக்கமாக உள்ளது.

யூரோ இப்போது அமெரிக்க டொலருக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது மிக முக்கியமான நாணயமாக உள்ளது, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியே உள்ள 60 நாடுகள் மற்றும் பிரதேசங்களும் இதைப் பயன்படுத்துகின்றன அல்லது தங்கள் நாணயத்தை அதனுடன் இணைக்கின்றன.

அடுத்த சில ஆண்டுகளில், குரோஷியா, ருமேனியா மற்றும் பல்கேரியா ஆகியவை யூரோவை ஏற்றுக்கொள்ள உள்ளன. எதிர் காலத்தைப் பார்க்கும்போது, டிஜிற்றல் யூரோவின் யோசனை விவா





# சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் கொடுப்பனவு

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள சமுர்த்தி சமூகப்பாதுகாப்பு நிதியத்தின் மூலம், மாண வர்களுக்கான சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலக சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் யூ.எல். எம். சலீம் தலைமையில் கடந்த திங்கட்கிழமை சம்மாந் துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் ஹனிபா பிரதம அதிதியாக கலந்துகொண்டு கொடுப்பனவு சான்று பத்திரங்களையும், காசோலை யினையும் வழங்கிவைத்தார்.

சமூர்த்தி அபிவிருத்தி வங்கி ஊடாக சமுர்த்தி உதவி பெறும் பயனாளிகளின் குடும்பங்களில் உள்ள கல்விப் பொதுத்தராதர சாதரண தரம் சித்தியடைந்து (2020/2022கல்வியாண்டில் )உயர்தரக் கல்வியை தொடர்கின்ற மாணவர்களின் கல்வி ஊகக்குவிப்புக்காக குறித்த சமூர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் வழங்கப் படுகின்றது. சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள 51 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இருந்து 266மாணவர்கள் இந்தபுலமைப்பரிசில்கொடுப்பனவை பெறு+வதற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் உள வளத்துறை ஆலோசகர் மனூஸ் அபூபக்கர் மாண வர்களுக்கு சிறப்பு ஆலோசனைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கனகசிங்கம்

### ஜன.22 கடமையைப் பொறுப்பேற்பார்

கிழக்குப்பல்கலைக்கழகத் தின் 10 ஆவது துணைவேந் தராக பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழ கத்தின் முகாமைத்துவ பீடத் தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த இவர் தொடர்ந்து விரிவுரையாளராகவும், அத னைத் தொடர்ந்து வர்த்தக முகாமைத்துவ பீட பீடாதிபதி யாகவும் செயற்பட்டார்.

அதனைத் தொடர்ந்து திரு கோணமலை வளாகத்தின் இயக்குநராக செயல்பட்டு அதன் இன்றையவளர்ச்சிக்கு தனது பாரிய பங்களிப்பை நல்கியிருந்தார். இவரது காலத்தில் திருகோணமலை வளாகம் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான முழு முயற் சிகள் முன்னெடுக்கப்பட்டன.

எதிர்வரும் ஜனவரி 22 ஆம் திகதி முதல் நடை முறைக்கு வரும் வண்ணம் கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தராக கடமை யைப் பொறுப்பேற்கவுள்ளார்.



## வெள்ளத்தில் மூழ்கின்றன மட்டக்களப்பு பாடசாலைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வந்த வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை தற்போது சற்று ஓய்ந் துள்ள போதிலும், தற்போதும், பாடசாலைகள், மற் றும், மக்கள் குடியிருப்புக்கள் உள்ளிட்ட பல இடங் களில் மழைவெள்ளம் தேங்கி நிற்பதனால் ஆசிரி யர்கள், மாணவர்கள், மற்றும் பொதுமக்கள் உள் ளிட்ட பலரும் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகிறோம் என கவலை தெரிவிக்கின்றனர்.

மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்களை நேரில் அவதானித்த மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜ் தனது சொந்த செலவில் நேற்று கொங்றீட் வீதியை உடைத்து தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தின் களுவாஞ்சிகுடி கிராமத்தில் அமைந்துள்ள சரஸ்வதி வித்தியாலயம் தற்போதும் வெள்ள நீரில் அகப்பட்டுள்ளதனால் அங்கு கற்பிக்கும், ஆசிரியர்களும், கல்வி கற்கும் மாணவர்களும் மிகுந்த அசௌகரியங்க ளுக்குட்பட்டு வருகிறார்கள். இதனால் தமது பிள்ளைகள் தொற்று நோய்க்குட்படும் நிலைமைக் குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.



## புனித யூதாதையு திருத்தலத்தில் தைப்பொங்கல் திருப்பலி பூசை

மட்டக்களப்பு மாவட்டம் தேத்தாத்தீவு புனித யூதாதையு திருத் தலத்தில் தைப்பொங்கலை முன்னிட்டு இன்று காலை 6.30 மணி யளவில் திருப்பலி பூசை இடம்பெற்றது.

திருத்தலத்தின் குரு நிர்மல் சூசைராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இத்திருப்பலி பூசையில் அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

## களுவாஞ்சிகுடி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் தைப்பொங்கல் விசேட பூசை



தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற களுவாஞ்சிகுடி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை 7 மணியளவில் விசேட பூசை நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஆலய பிரதம குரு சிவஶ்ரீ மயூ ரவதனக் குருக்கள் தலைமையில் நடை பெற்ற இப்பூஜை நிகழ்வில் பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# கோறளைப்பற்று மைதானத்தில் கொட்டப்பட்டுள்ளன கற்கள்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் கொட்டப்பட்டுள்ள கொங்கிறீட் கற்களை அப்புறப்படுத்துமாறு மைதானத்தை பயன்படுத்தும் விளையாட்டு வீரர்கள்

பகுதியில் குடிநீர் குழாய்கள் பொருத்து வதற்காக பல வருடங்களுக்கு முன்னர் கொங்கிறீட் வீதிகள் தோண்டப்பட்டன.

அவ்வாறு தோண்டப்பட்ட கழிவு கற்களே இவ்வாறு ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் ஒரு பகுதி

லுள்ள ஏராளமான விளையாட்டுக் கழக வீரர்களும், பாடசாலை மாணவர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்தோடு, குறித்த மைதானத்தை பிரதேசத்திலுள்ள அரச உத்தியோகத் தர்கள், முக்கியஸ்தர்கள் எனப்பலரும்

இவ்வாறு நீண்ட வருடங்களாக கவனிப்பாரற்றுக் காணப்படும் கற்களை அப்புறப்படுத்தி அனைவரும் பயன்படுத் தும் வகையில், மைதானத்தை புனர்நிர் மாணம் செய்ய ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்

# கொழும்பில் மீளவும் பொலிஸ் பதிவுகள்!

கொழும்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் தொழில் நிமித்தமோ வேறு காரணங்களுக்காகவோ தற்காலிக மாகத் தங்கியிருக்கும் அனைவரையும் உடன் பதிவு செய்யும் திட்டமொன்று பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண பிரஜைகள் பொலிஸ் பிரிவூடாக இந்தத் திட்டம் ‘ தேசிய பாதுகாப்பை உறுதி செய்வோம் 'குற்றம், போதைப் பொருளை ஒழிப்போம்' எனும் தொனிப் பொருளின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த பதிவு நடவடிக்கைகளுக்காக வேண்டி பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 76 ஆவது அத்தியாயத்துக்கு அமைய விண்ணப்பம் ஒன்று தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், அதனை இன்று வெள்ளி, நாளை சனி, நாளை மறுதினம் ஞாயிறு தினங்களில் பெற்று பூர்த்தி செய்து பொலிஸாருக்கு வழங்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ மேலும் குறிப்பிட்டார்.

இந்த தற்கலிக வதிவாளர்களைப் பதியும் திட்டம் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதை நோக்ககாக கொண்டது.

நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் மூன்று நாள்களுக்கு நீங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள வீதிகள் ஊடாக பொலிஸ் பிரஜைகள் பிரிவின் அதிகாரிகள் வருவார்கள். அவர்களின் கைகளில் தற்காலிக வதிவாளர்களைப் பதிவு செய்யும் விண்ணப்பம் இருக்கும். அவற்றைப் பெற்றுப் பூர்த்தி செய்து கொடுக்கவும். அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் இதற்கென விடே கருமபீடம் ஒன்று ஸ்தாபிக் கப்பட்டுள்ளது.

அங்கு சென்று ஒரு விண்ணப்பத்தைப் பெற்று பூர்த்திசெய்து கொடுக்க முடியும் – எனத் தெரிவித்தார்.

இந்த பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் யாரின் தகவல்களைப் பெற்றுக்கொள்ள பொலிஸார் எதிர்பார்க்கின்றனர் என்பது தொடர்பிலும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல் துவ விளக்கினார்.

‘ நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பலர் கொழும்புக்கு வந்து தங்கியுள்ளனர். கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அதிகார எல்லைக்கு உட்பட்ட அதாவது கொழும்பு மாநகர சபையின் கீழ் வரும் பகுதிகளில், நிரந்தர வதிவாளர்களின் வீடுகளில், வர்த்தக நிலையங்களில், நிறு வனங்களில், அரச மற்றும் தனியார் கட்டுமான வளாகங்களில், தங்கியிருக்கும் அனைத்து தற்காலிக வதிவாளர்களையும் பதிவு செய்ய வேண்டும் ’ என தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு மற்றும் குற்றங்களை தடுத்தல் ஆகியனவே இந்த பதிவின் நோக்கம் எனவும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ கூறினார்.

எவ்வாறாயினும், கடந்த யுத்த காலத்தின் போதும், கொழும்பில் தங்கியிருந்தவர்கள் மீது இத்தகைய பொலிஸ் பதிவு முறைமை ஒன்று அமுலில் இருந்த நிலையில், அதனை ஒத்த கெடுபிடிகளுக்கு தற்போது அறிமுகப் படுத்தப் படும் பதிவு முறைமையும் வழிகோலுமா என பொது மக்கள் பீதியடைந்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது..

# கொழும்பு பல்கலைக் கழகத்துக்கு புதிய உபவேந்தர் நியமிக்கப்பட்டார்

## பேராசிரியர் முருத்தெட்டுவே ஆனந்த தேரரை மாற்றி



கொழும்பு பல்கலைக் கழகத்தின் உபவேந்தராக பேரா சிரியர் எச்.டி கருணாரத்ன கடந்த புதன்கிழமை முதல் நியமிக் கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவால் அவர் நியமிக்கப் பட்டுள்ளார் என ஜனாதிபதியின் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் வேந்தராக பேராசி ரியர் முருத்தெட்டுவே ஆனந்த தேரரை ஜனாதிபதி முன்னர் நியமித்திருந்தார்.

அதன் பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவர்கள் சிலர் தேரரிடம் இருந்து பட்டச் சான்றிதழைப் பெற மறுத்திருந்தனர். இந்த விடயம் பெரும் சர்ச்சையை ஏற் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க தாகும்.


# தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை துரிதப்படுத்த சுகாதார அமைச்சு முடிவு


பொதுமக்கள் காட்டும் தயக்கத்தை கருத்திற்கொண்டு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த சுகாதார அமைச்சு தீர் மானித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தி யர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பகுதியிலும் மூன்று கூடுதல் தடுப்பூசி மையங்கள் அமைக்கப்படும் என்றும் அதுதவிர, மக்கள் தடுப்பூசியைப் பெறுவதற்கு வசதியாக, அனைத்து வைத்தியசாலைகளும் தங்கள் தடுப்பூசி மையங்களை இரவு 8 மணி வரை திறந்திருக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தடுப்பூசி மையத்தை அடைய முடியாத எவரும், அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குத் தெரிவிக்கலாம் என்றும் இதனால் தொலைபேசி சேவையை ஏற்பாடு செய்யலாம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# இணுவில் மக்களுக்கு பொங்கல் பொதிகள்!





இணுவில் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு வலி. தெற்கு பிரதேசசபையின் முன் னாள் தவிசாளர் தி.பிரகாஷின் கோரிக்கைக்கு அமைவாக 10 குடும்பங்களுக்குப் பொங்கல் பொதிகளும் பொங்கல் பானையும் கடந்த புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

இந்தப் பொதிகளை இலங் கைத் தமிழரசுக் கட்சியின் மத்தி யகுழு உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் கனடா முக்கியஸ்தரு மான கலாநிதி அகிலன் முத்துக் குமாரசுவாமி அனுசரணை வழங்கியிருந்தார். இதேவேளை அன்றைய தினம் மாவிட்டபுரம், கொள்ளங்கலட்டி, தெல்லிப் பழை ஆகிய பகுதி மக்களுக்கும் கலாநிதி அகிலன் முத்துக்குமார சுவாமியால் அந்தப் பிரதேசங் களைப் பிரதிநிதித்துவப்படுத் தும் தமிழரசுக் கட்சி உறுப் பினர்கள் ஊடாகப் பொங்கல் பொதி, பொங்கல் பானை என் பன வழங்கப்பட்டன.

'அனைவரையும் பொங்க வைப்போம்' என்னும் கருத்திட் டத்தின் கீழ் இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் கனடா வாழ் உறுப்பினர்களின் அனுசரணை களை ஒருங்கிணைத்து கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேசங்களுக்கும் பொங்கல் பொதி, பொங்கல் பானை என் பனவற்றை வழங்கிவருகின் றமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ள சம்பவம்; பிரதான சந்தேகநபரிடம் 72 மணிநேர விசாரணை

பொரளையில் உள்ள கிறிஸ்தவ தேவால யத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரை 72 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்த கொழும்பு குற்றவியல் தடுப்புப் பிரிவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டமையை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், சம்பவம் தொடர்பாக பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட நால்வர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்த குண்டு 13 வயது சிறுவன் ஒருவனின் ஊடாக குறித்த தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

பின்னர் குறித்த சிறுவன் புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டமையை அடுத்து, அவரிடம் நீதிவான் வாக்குமூலம் பெற்றுள்ளார்.

அத்தோடு, நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமைய குறித்த கைக்குண்டு கடந்த புதன்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

மேலும் வெப்பம் அடையும் பட்சத்தில் வெடிக்கும் வகையில் இந்த கைக்குண்டு தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

# வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய சுற்றுமதில் சிறிதரனால் திறப்பு



வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் சுற்று மதிலினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் 2021 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் ஆறு லட்சம் ரூபா செலவில் குறித்த மதில் அமைக்கப்பட்டது.

பாடசாலையின் முதல்வர் பங்கயற்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுடன் கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் சிவ மோகன் கரைச்சி கோட்டக் கல்வி அலுவலர் தர்மரத்தினம், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சிறீஸ்குமார், ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத் திச்சங்கத்தினர் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.01.2022இல் வெளியிடப்பெற்றது.